செ.வெ. எண்: 062 நாள்:31.01.2017

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)

## 2015–2016ம் ஆண்டிற்கான 30 சதவிகிதம் பங்குவிகிதம்

## ரூபாய் 35.38 கோடி

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965ஆம் ஆண்டு தனியார் தொழில் முனைவருடன் கூட்டுச் சேர்ந்து, தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும் கூட்டுத்துறை நிறுவனங்கள் மூலம் முதலீட்டை ஈர்க்கவும் ஏற்படுத்தப்பட்டது. டிட்கோ பெரிய உற்பத்தி தொழிற்சாலைகள் மற்றும் தொழில் சார்ந்த கட்டமைப்பு திட்டங்களை கூட்டுத்துறை நிறுவனங்கள் மூலம் நிறுவி வருகின்றது.

டிட்கோ நிறுவனம் 2015–2016ம் ஆண்டில் மிகவும் உயர்ந்த செயலாக்கத்தின் மூலம் ரூபாய் 137.47 கோடி மொத்த வருமானத்தையும் ரூபாய் 117.93 கோடி நிகர இலாபத்தையும் ஈட்டியுள்ளது.

டிட்கோ நிறுவனம் 2013–14 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தமிழக அரசுக்கு ஆதாயப்பங்குத் தொகையினை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக டிட்கோ நிறுவனத்தின் முதன்மை செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், திரு.விக்ரம் கபூர் இ.ஆ.ப. அவர்கள் 30.01.2017 அன்று மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்களிடம் 2015–2016 நிதி ஆண்டிற்கான 30 சதவிகித ஆதாயப்பங்குத் தொகையான ரூபாய் 35.38 கோடியை வழங்கினார். இது கடந்த 3 ஆண்டுகளில் அதிகமான ஆதாயப்பங்குத் தொகையாகும்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**